

திண்டுக்கல் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை ஆற்றினார். உடன் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வெள்ளிமலை, மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன், முன்னாள் நத்தம் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டிஅம்பலம் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.


தமிழ்நாடு முன்னாள் காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி இல்ல திருமண விழாவில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் வி.நாராயணசாமி , விழுப்புரம் தெற்கு மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

### சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழா பவளவிழாவில்

# திண்டுக்கல் மாவட்டக் கழகத்தினர் பல்லாயிரவர் பங்கேற்பீர்!

## திண்டுக்கல்லில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் அமைச்சர் அர. சக்கரபாணி பேச்சு!

திண்டுக்கல், செப்.7-

திண்டுக்கல்லில் தெற்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமை வகித்தார். திண்டுக்கல் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் வெள்ளிமலை அனைவரையும் வரவேற்று பேசினார். திண்டுக்கல் ஒன்றிய துணைத் தலைவர் சோபியா ராணி, குருசாமி, ராதாகிருஷ்ணன், ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் சுப்புலட்சுமி, செந்தில்குமார், அலெக்ஸ், புருஷோத்தமன், ஜெயராமன், இளைஞரணி அமைப்பாளர் ரூபன், முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் அமைச்சர் பேசுகையில், சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழா, பவளவிழா ஆண்டு விழாவில் திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து திரளான அளவில் நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொள்ள வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் தமிழகத்தில் 40க்கு 40 தொகுதியிலே வென்று மிகப்பெரிய வெற்றியை பெற்றோம். வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழக முதல்வர் கழகத் தலைவர் 200க்கும் மேற்பட்ட தொகுதி கண்டிப்பாக வெற்றி பெற வேண்டும் என்று சொன்னதை நாம் உறுதியேற்று, மிகப் பெரிய வெற்றியை பெற்றிட நாம் கடுமையாக உழைக்க வேண்டும் இன்னும் ஒரு ஆண்டு மட்டுமே உள்ளது. அதற்காக நாம் இன்று முதல் அனைவரையும் ஒருங்கிணைத்து நமக்குள் எந்த வித பாகுபாடு பார்க்காமல் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு பணியாற்றிட நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

அறிஞர் அண்ணா சொன்னது போல் நாம் அனைவரும் ஒரு தாயின் வயிற்றில் பிறக்கவில்லை என்றாலும் பல தாய் வயிற்றில் பிறந்து இன்று நாம் ஒன்றாக ஒரே குடும்பமாக இருந்து வருகிறோம். நமது ஒரே இலக்கு 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் தமிழக முதல்வராக கழகத் தலைவர் மு.க .ஸ்டாலினை முதல்வரராக அமர்த்திட கடுமையாக இரவு பகலாக பாடுபட வேண்டும். உங்களின் எதிர்பார்ப்பு நம்பிக்கையை நாங்கள் கண்டிப்பாக நிறைவேற்றுவோம். அக்டோபர் 20 வாக்காளர் சரிபார்ப்பு பட்டியல் பணிகளையும் புதிய வாக்காளர் சேர்ப்பு பணியும் நாம் சிறப்பாக செய்திட வேண்டும். நமது மூன்று ஆண்டுகால சாதனைகளை நிர்வாகிகள் முதல் தொண்டர் வரை தெருமுனை பிரச்சாரமாக ஒவ்வொரு குடும்பக் குடும்பமாக கொண்டு செல்ல வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கின்றன்.

மகளிர் உரிமைத்தொகை தகுதியான விடுபட்டவர்களுக்கு கிடைக்க தமிழக முதல்வர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.மூன்று வருடங்களில் ரேஷன் கார்டு கேட்டு புதிதாக விண்ணப்பித்த 16 லட்சம் பேருக்கு கார்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது 3 லட்சம் பேர் புதிதாக ரேஷன் கார்டு கேட்டு விண்ணப்பித்துள்ளனர். இதில் ஒரு லட்சம் பேருக்கு தற்போது புதிய ரேஷன் கார்டு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆய்வுப் பணிகள் முடிவடைந்த உடன் அவர்களுக்கும் மீதம் உள்ளவர்களுக்கும் ரேஷன் கார்டு வழங்கப்படும்.

அதேபோல் தமிழகத் 2,115 ரேஷன் கடைகள் பிரிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் உத்தரவின் பேரில் ரேசன் கடைகளில் தரமான அரிசி வழங்கப் பட்டு வருகிறது. மேலும் வெளி மாநிலங்களில்இருந்து கிலோ 28 ரூபாய் வீதம் உயர் தரமான அரிசி மாதந்தோறும் 75,000 மெட்ரிக் டன் வாங்கி பொது மக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப் பட்டு வருகிறது என்றார்.

கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. ஆண்டி அம்பலம், மேற்கு மாவட்ட கழகப் பொருளாளர் விஜயன், ஒன்றிய பெருந்தலைவர் ராஜா,நத்தம் பேரூராட்சி தலைவர் ஷேக் சிக்கந்தர் பாட்சா, மாவட்ட மீனவர் அணி கணேசன், கவியரசன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் தேவி இளங்கோ, ஊராட்சி மன்ற தலைவர்கள் சங்கீதா வெள்ளிமலை, சித்ரா ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். மாவட்ட கவுன்சிலர் பரமேஸ்வரி நன்றி கூறினார்.

### மதுரை வடக்கு, தெற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## விமான நிலையத்தில் கழகத்தினர் திரள்கின்றனர்!

### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, செப். 7-

மதுரையில் வரும் ஒன்பதாம் தேதி மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற உள்ளது. அதில் இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்.

அதற்காக நாளை (8-ஆம் தேதி) மாலை விமானம் மூலம் மதுரை வரும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கும் நிகழ்வில் மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட கழகத்தினர்




அலைகடலென திரண்டு வருமாறு வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

அதன் விபரம் வருமாறு:-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை மாவட்டத்தில் பல்வேறு நலத் திட்டங்கள் உதவிகள் தொடர்ந்து வழங்கப் பட்டு வருகின்றது.

இந்நிலையில் அதில் மேலும் ஒரு மைல் கல்லாக மாபெரும் நலத்திட்ட உதவிகளை வரும் 9.9.2024 - திங்கள்கிழமை அன்று மதுரையில் இளைஞரணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்க உள்ளார். பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் இவ்விழாவிற்காக விமானம் மூலம் நாளை (8.9.2024 ஆம் தேதி) மாலை 7 மணிக்கு மதுரை விமான நிலையம் வந்தடைய உள்ளார்.

அப்போது மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத்தினர் இரு வண்ண கொடியை கையில் ஏந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்க அலைகடலென திரண்டு வருமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு. மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில்

# நாமக்கல் பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ. மகள் திருமண விழா!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - கே .பொன்னுசாமி எம்.எல்.ஏ. முன்னிலை!

நாமக்கல், செப்.7-

நாமக்கல் கிழக்கு மாவட்டம் புதுச்சத்திரம் ஒன்றியம் கதிராநல்லூர் நத்தமேடு பகுதியைச் சேர்ந்தவரும், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினருமான பெ.இராம லிங்கம் - ஆர். இந்திரா ஆகியோரது மகள் மருத்துவர் ஆர். தீப்தி, திருச்செங்கோடு மாரப்ப நாயக்கன்பட்டி, அத்தியம்பாளையம் பாலக்காடு பகுதியைச் சேர்ந்த ஆர்.பழனிச்சாமி- பி.கமலம் ஆகியோரின் மகனுமான மருத்துவர் பி.ரேவந்த் ஆகியோரது திருமணம் நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என். இராஜேஸ்குமார் தலைமையிலும், வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இவ்விழாவில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், அமைச்சர்கள் அர.சக்கரபாணி, மு.பெ. சாமிநாதன், சிவ.வீ.மெய்ய நாதன், சு.முத்துசாமி, எஸ். எஸ்.சிவசங்கர், எம்.பி.க்கள் டி.எம்.செல்வகணபதி, வி. மாதேஸ்வரன், கே.இ.பிரகாஷ், எம்.எல்.ஏ.க்கள் ஈ. ஆர். ஈஸ்வரன், வழக்கறிஞர் ஆர்.ராஜேந்திரன், ராஜா, எம்.பிரபாகரன், சிவ காம சுந்தரி உள்ளிட்ட எம்.எல். ஏக்கள், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக, மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

முன்னதாக மணமக்களின் உறவினர்கள் ஆர்.அஸ்மிதா, கே.நடராஜன், சண்பக வடிவு, செந்தாமரைச் செல்வி, ராஜா மணிவேல், விஸ்வநாதன், பாரதி, அருள் பூவரசி, தங்கவேல் கண்ணகி உள்ளிட்டோர் அனைவரையும் வரவேற்றனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில்

# புதிய அங்காடிக் கிளையினை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

## பயனாளிகளுக்கு நத்தம் வீட்டுமனை பட்டாவிற்கான ஆணைகளையும் வழங்கினார்!

புதுக்கோட்டை. செப்.7-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரம், எம்.எம் 278அரசமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ், காரையூரில் புதிய அங்காடி கிளையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், பயனாளிகளுக்கு நத்தம் வீட்டுமனை பட்டாவிற்கான ஆணைகளை வழங்கினார். பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலன்காக்கும் வகையில் எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொது மக்களுக்கு உணவிற்காக தேவைப்படும் அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு குடிமைப் பொருட்கள் பொதுமக்களின் இல்லங்களுக்கு அருகிலேயே பெற்றிடும் வகையில் புதிய நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு வருகிறது. அதன்படி காரையூரில் புதிய அங்காடி கிளை திறந்து வைக்கப்பட்டது.

காரையூரில் இந்த புதிய அங்காடி திறந்து வைக்கப் பட்டதன் மூலம், இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் குடிமைப் பொருட்கள் வாங்குவதற்கு நீண்ட தூரம் சென்று வருவது தவிர்க்கப்பட்டு, தங்களது இல்லங்களுக்கு அருகிலேயே குடிமைப் பொருட்கள் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த காரையூர் அங்காடியின் மூலம் காரையூர், சங்கரம்பட்டி, மாங்காளிபட்டி, மறவர் குடியிருப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1,131 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற உள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்சார்பில், ஆதிதிராவிடர் மக்களைச் சேர்ந்த 32 பயனாளிகளுக்கு நத்தம் வீட்டு மனைப் பட்டாவிற்கான ஆணைகள் வழங்கப்பட்டது. இந்தப் பட்டாவிற்கான ஆணைகளை பெற்றுக்கொண்ட பயனாளிகள் அனைவரும் இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது வாழ்வின் பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். எனவே தமிழக அரசு பொதுமக்களின் மீது மிகுந்த அக்கறைகொண்டு இதுபோன்ற மக்கள்நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது எனவும் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஆர்.ரம்யாதேவி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர் சுப்பிரமணியன், அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள்,

புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் மேலாளர் பா. பிரபாகரன், பொன்னமராவதி வட்டாட்சியர் எம். சாந்தா முருகேசன், ஊராட்சிமன்றத் தலைவர்கள் மு.முகமது இக்பால் (காரையூர்), முருகேசன் (மேலத்தானியம்), ஒன்றியக்குழு உறுப்பினர் வளர்மதி முருகேசன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மீனாட்சி மணிகண்டன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் ஒன்றிய தி.மு.க. சார்பில்

# பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் - உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் – அருண் நேரு.எம்.பி –வீ. ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், செப். 7 -

பெரம்பலூர் முத்து கிருஷ்ணா மக்கள் மன்றத்தில், பெரம்பலூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் மற்றும் தி.மு.க.உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, பெரம்பலூர் ஒன்றிய அவைத்தலைவர் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பெரம்பலூர் ஒன்றிய செயலாளர் எம்.ராஜ்குமார் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர்,பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்டப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

பாராளுமன்ற தேர்தலில் அதிகப்படியான வாக்களித்து கே.என். அருண்நேருவை பாராளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்த, அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர், தொடர்ந்து பெரம்பலூர் ஒன்றியத்திற்குட்பட்ட தி.மு.க. கிளைக் கழக நிர்வாகிகளிடம் உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பர மேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், எஸ். அண்ணாதுரை,

மாவட்ட அவைத் தலைவர் அ.நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.நல்லதம்பி, வேப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் தி.மதியழகன், வேப்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சி.ராஜேந்திரன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லவன், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் ந. ஜெகதீஸ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர் டிஆர்.சிவசங்கர்,

பெரம்பலூர் ஒன்றிய பெருந்தலைவர் மீனா அண்ணாதுரை மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், பெரம்பலூர் ஒன்றிய பொருளாளர் கலையரசன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகி கள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.


கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 153 வது பிறந்தநாள் முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மாநகராட்சி பொருட்காட்சி திடலில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், விஜிலா சத்யானந்த், ஏ.எல்.எஸ். லெட்சுமணன், சுரேஷ், கிரிஜா குமார், துபாய் சாகுல், மீரான் மைதீன், மிக்கேல்,தொப்பி மைதீன்,அனிதா, செல்வம், வேயிலியப்பன்,நெல்லை ரவி, இமானுவேல், கதிஜா இக்லாம் பாசிலா, உலகநாதன், சுந்தர், நித்திய பாலையா,சங்கர், பாலன் என்ற ராஜா, மகேஷ், முத்துராமன், மணிகண்டன், ராஜன், வேல்முருகன், பத்மராஜ், வள்ளியம்மாள், ரேவதி அசோக், தேவிகா, அருணாசல தேவி, சித்ரா பௌர்ணமி, ஜோதிபிரியா, பூங்கனி, முருகன், பிரான்சிஸ் சரவணன், நாதன் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.


பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட போகலூர் ஒன்றியம் உரத்தூர் ஊராட்சி உரத்தூர் கிராமத்தில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி 2024–2025ன் கீழ் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள புதிய நியாய விலை கடை கட்டுவதற்கான பணியை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், துவக்கி வைத்தார் உடன் இந்நிகழ்வில் போகலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் குணசேகரன், போகலூர் ஒன்றிய குழு துணைதலைவர் வழக்கறிஞர் பூமிநாதன், வழக்கறிஞர் அணி முரளிதாஸ், பிரதிநிதி கார்த்திக், நயினார் கோவில் ஒன்றிய துணை செயலாளர் திலகர், சத்திரக்குடி அம்பேத்கர் நகர் கிளை செயலாளர் கார்த்திக், ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.